# சங்க இலக்கியத்தில் உளவியல் கூறுகள்

முனைவர் வெ.சிவசங்கர், பேராசிரியர் & துறைத்தலைவர், தமிழ்த்துறை, வேல்ஸ் பல்கலைக்கழகம், பல்லாவரம், சென்னை. கைபேசி: +91 90474 73013

சங்க இலக்கியம் என்பது தமிழரின் இரண்டாயிரம் ஆண்டு காலப் பண்பாட்டு அடையாளமாகவும், உலகச் செவ்வியல் இலக்கிய வரிசையில் தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ள ஒரு கருவூலமாகவும் திகழ்கிறது. சங்க இலக்கியப் பாடல்கள் பெரும்பான்மையும் உளவியல் நோக்கிலேயே பாடப் பட்டுள்ளன. குறிப்பாகத் தம்மை தாமே அறியும் தனிப்பட்ட தேடுதல். தமது உணர்வுகள், எண்ணங்கள், செய்யும் செயல்களுடன் தொடர்புடையது உள வியல். இது நடத்தையைப் பற்றிய அறிவியல். உயிர்களின் அறிவுநிலையை, அதற்கான உறுப்புகளை வரிசைப் படுத்திய தொல்காப்பியர்,

**“ஆறறிவதுவே அவற்றொடு மனனே”**

**– மரபியல் நூற்பா 571**

என்று கூறியுள்ளார். உடல், நா, மூக்கு, கண், செவி என ஐம்புலன்களால் பெறும் அனுபவங்களின் தொகுப்பு, எண்ண அலைகளாக நமக்குள் ஓடும் போது, எண்ண அலைகளின் தொகுப்பைத் தொகுத்து அறிவது மனம். உடல், கண், காது, மூக்கு, செவி போன்று இது ஒரு உறுப்பல்ல. எண்ண அலைகளின் தொகுப்பு. பகுத்தறிதல். பகுத்தறிவு. இதனால்தான்

**மக்கள் தாமே ஆறறி வுயிரே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.**

**– மரபியல் நூற்பா 1526**

என முழங்கி, மனிதன் ஆறறிவு கொண்டவன் என்று மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பதிவு செய்தவர் தொல்காப்பியர். “மனநலமே மன்னுயிர்க்கு ஆக்கம்” என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

மனித வாழ்வியலை ‘அகம்’ மற்றும் ‘புறம்’ என இரு பெரும் பிரிவுகளாகப் பகுத்து, அதில் அக வாழ்வை மிக நுட்பமான இலக்கிய உத்திகளுடன் சங்கப் புலவர்கள் பதிவு செய்துள்ளனர். சங்க இலக்கியத்தில் அக வாழ்வு என்பது வெறும் காதல் உணர்ச்சிகளின் வெளிப்பாடாக மட்டுமல்லாமல், அது ஒரு சமூக ஒழுக்கம், நிலம் சார்ந்த

வாழ்வியல் மற்றும் உளவியல் சார்ந்த கட்டமைப்பு என்பதை விரிவாக ஆராய்கிறது. ஐந்திணைக் கோட்பாடு கள், முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகியவற்றின் வாயிலாக தமிழர்களின் அக வாழ்வு பற்றியும் உளவியல் மற்றும் சமூகவியல் முக்கியத்துவத்தை பற்றியும் அறிதல் வேண்டும் என்பதன் அடிப்படையில் இக் கட்டுரை அமைகிறது.

இக்கால உளவியல் அறிஞர்கள், அச்சம்சார் உணர்ச்சிகள் (அச்சம், கவலை, பீதி, வெட்கம்), சினம்சார் உணர்ச்சிகள் (சினம், பொறாமை, வெறுப்பு), அன்புசார் உணர்ச்சிகள் (அன்பு, காதல், மகிழ்ச்சி, நகை, உற்சாகம்) என வகைப்படுத்தியுள்ளனர். இக்கால அறிவியல் அறிஞர்களுக்கு முன்னோடியாகத் தமிழர்கள் விளங்கி யிருந்தனர் என்பது வியப்பான ஒன்று. மனநலம், உடல் நலம் இரண்டுமே மனிதனுக்குத் தேவை என்பதைப் பழந்தமிழ் இலக்கியங்கள் வலியுறுத்து கின்றன. உள்ளத்தில் உள்ளவற்றை வெளியே கொட்டிவிட வேண்டும் என்பதற்காகவே தலைவனும் தலைவி யும் அஃறிணைப் பொருள்களிடம் பேசுவது, அவற்றையே தூதாக அனுப்ப எண்ணுவது, தன் தோழி, பாங்கன் ஆகியோரிடம் முறையிடுவது, வாயில் கள் அவர்களுக்கு உதவி செய்வது எனப் பல உளவியல் முறையை இலக்கியங் கள் பதிவு செய்துள்ளமை வியப்பிற் குரியதாகும். தன்னுணர்ச்சிப் பாடல் களாக மட்டுமே அமைந்துள்ள நமது தொல்இலக்கியங்களான சங்க இலக்கி யங்களில் இத்தகு உணர்வு நிலைகளைப் பரவலாகக் காணமுடியும்.



## விலங்கின உளவியல்

உளவியலில் கல்வி உளவியல், சமூக உளவியல், சட்ட உளவியல், மருத்துவ உளவியல் போன்ற பல உளவியல்கள் உள்ளன. இவ்வுளவியல் பிரிவுகளில் ஒன்றே விலங்கின உளவியல்.

இவ்வுலகில் ஆற்றிவு கொண்ட மனிதன் மட்டும் இன்றி ஒவ்வொரு உயிரினமும் சில நேரங்களில் நிசப்த மாகவும் சில சமயங்களில் சினம் கொண்டும் தன்னைக் காத்துகொள்ள அல்லது தன்னை முன்னிலைப்படுத்திக் கொள்ள பல உளவியல்களைக் கையாளுகின்றன என்பதையும், குரங்கு தன்னைப் பாதுகாத்து கொள்வதிலும், தன் இனத்தைப் பாதுகாப்பதிலும், உணவளிப்பதிலும் ஆதிக்கம் செலுத்தி உள்ளதைக் குறுந்தொகையின் பாடல் களைச் சான்றாகக் கொண்டு அறியலாம்.

**கைம்மை உய்யாக் காமர் மந்தி**

**– குறுந்தொகை பாடல் எண் 69**

மனிதர்களாகிய நமக்குப் பிரிவாற்றாமை இருப்பது போலவே, விலங்குகளுக்கும் குறிப்பாகக் குரங்கு போன்ற மேம்பட்ட உயிரினங்களுக்குத் துணையின் மீதான பற்று மிக அதிகம். பெண் குரங்கு (மந்தி) தன் ஆண் குரங்கையே உலகமாக நினைத்து வாழ்ந்திருக்கிறது. தன் துணையை இழக்கும்போது ஏற்படும் உளவியல் அதிர்ச்சியை *(Trauma)* அதனால் தாங்கிக்கொள்ள முடிவதில்லை.

**"கைம்மை உய்யா"** என்பது கணவனை இழந்த நிலையைத் தாங்க முடியாமல் தவிப்பதைக் குறிக்கிறது. உளவியலில், மிக நெருக்கமான ஒருவரின் இழப்பு என்பது ஒருவரை மனரீதியாக முற்றிலுமாக உடைத்துவிடும். அந்தத் துயரத்தின் உச்சக்கட்டத்தில் *(Peak of Depression)* அறிவு வேலை செய்வதில்லை; உணர்ச்சிகள் மட்டுமே மேலோங்கி நிற்கும் என்பதை இது காட்டுகிறது. எதிர்காலம் குறித்த பெரும் பயம், தனிமை, மற்றும் துணையில்லாத வாழ்வு அர்த்தமற்றது என்ற உளவியல் விரக்தி விலங்குகளிடமும் வெளிப்படலாம் என்ற இயற்கை அவதானிப்பு இதில் உள்ளது.

தினைபுலம் காத்த மகளிர் சோர்தலை நீக்க சுனைக்கண் சென்றனர். அப்பொழுதினில் மரத்தின் கிளையிடை இருந்த பத்தியும் கல்லா வன்பறழ்களும் அத்தினைகளை கவர்வதாக,

**நிரைவளை முன்கை நேரிழை மகளிர்**
**இருங்கல் வியலறைச் செந்தினை பரப்பிச்**
**சுனைபாய் சோர்விடை நோக்கிச் சினையிழிந்து**
**பைங்கண் மந்தி பார்ப்போடு கவரும்.**

**– குறுந்தொகை பாடல் எண் 335**

கபிலர் எழுதிய இந்த பாடலில், செந்தினையைத் திருடிச் செல்லும் மந்தியின் செயல் மூலம் மனித மற்றும் விலங்கினங்களின் உளவியல் நுணுக்கமாக விளக்கப்பட்டுள்ளது. கவனச் சிதறலை எதிர்பார்த்துக் காத்திருக்கும் மந்தியின் கூர்நோக்கலும், குட்டிக்காக உணவு சேகரிக்கும் தாய்மையின் உணர்வும், தோழியின் மறைமுகக் கூற்றின் மூலம் தலைவனுக்கான எச்சரிக்கையும் இதில் வெளிப்படுகின்றன.

பெண்குரங்கு தனியாக வரவில்லை; தன் குட்டியையும் (பார்ப்போடு) கூட்டிக் கொண்டு வருகிறது.ஆபத்தான ஒரு சூழலில் உணவைத் திருடும்போதும் தன் குட்டியைத் தன்னுடனேயே வைத்திருப்பது பாதுகாப்பு உணர்வையும் *(Protective Instinct)*, குட்டிக்கு வாழ்வாதாரத்தைக் கற்றுக்கொடுக்கும் 'சமூகக் கற்றல்' *(Social Learning / Modeling)* என்னும் உளவியல் பண்பையும் காட்டுகிறது.இதனை அடியொற்றிய செய்தியை பெரும்பாணாற்றுப்படை பாடல் அடிகள் (393–395) மூலமும் அறியலாம்.

விலங்குகளின் செயல்பாடுகளை மனித உணர்வுகளோடு ஒப்பிட்டுப் பார்ப்பது சங்கப் புலவர்களின் வழக்கம். மேலும் சங்கப் பாடல்களில் பசு, ஆனேறு, கன்று, யானை. குதிரை, நாய், பூனை, எருமை, அணில், பாம்பு, எறும்பு, கோழி, காகம், கிளி, வௌவால், மகன்றில், குருகு போன்ற உயிரினங்களின் உளவியலும் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

இன்றுள்ள தொழில்நுட்பத்தினைப் பயன்கொண்டு பல தொலைக்காட்சி நிறுவனங்கள் காட்டில் வாழும் உயிரினம் முதல் கடலில் வாழும்



உயிரினம் வரை அவற்றின் செயல் பாடுகளை நுட்பமாகப் பதிவு செய்து ஒளிபரப்பி வருகின்றன. ஆனால் உற்று நோக்கலால் மட்டுமே சங்ககால மக்கள் உயிரினங்களின் செயல்பாடுகளை அறிந்து பாடல்களின் வழி கூறியுள்ளது வியப்பிற்குரியதாகும்.

## மனித உளவியல்

சங்க இலக்கியப் பாடல்களின் வழி அறியலாகும் மனித உளவியல் (Human Psychology) என்பது சமகால மனநலக் கோட்பாடுகளோடு மிக நெருக்கமாகப் பொருந்தக்கூடியது ஆகும்.மனித மனதின் மிக முக்கியமான உளவியல் பரிமாணங்களைச் சங்கப் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. சங்க அகப் பாடல்கள் மனிதர்களின் அகவாழ்க் கையையும் அவற்றின் வழி அவர்களது பல்வேறு உணர்வுகளையும் விளக்கு கின்றன. இதனை அகத்திணைக் கூற்று வகைகள் புலப்படுத்தப்படு கின்றன. இவ்வாறு உணர்வு நிலைகளை வெளிப்படுத்திக் கூற்று நிகழ்த்தும் அகத்திணை மாந்தர்களுள், தலைவியை ஈன்ற தாயான நற்றாயும், வளர்த்த தாயான செவிலியும் குறிப்பிடத்தக்கவர் கள் ஆவர். இருவரின் கூற்றுகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டு மனித உளவியல் கூறுகளை அறிவோம்.

சங்க இலக்கியங்கள் காட்டும் செவிலித்தாய் என்பவர் தலைவியின் ஆளுமையை (Personality) வடிவமைக் கும், அவளது உணர்வுகளுக்கு மதிப் பளிக்கும் மிகச் சிறந்த மனநலத் தோழமையாவாள். சங்க இலக்கியத்தில் தலைவி மற்றும் செவிலித்தாய் ஆகிய இருவருக்கும் இடையேயான உறவும், அவர்களின் மனநிலையும் மிக ஆழ மான குடும்ப மற்றும் சமூக உளவியல் (Family & Social Psychology) கோட்பாடு களின்படி அமைந்துள்ளன என்று கூறலாம்.

மகளை ஈன்ற நற்றாய் போல தலைவியை வளர்த்தவளான செவிலி யையும் தாய் என்று சுட்டும் நிலை இருந்ததால், மகட்போக்கிய தாய் கூற்று என்று பொதுவாகத் துறை குறிக்கப் பெற்ற பாடல்களை, நற்றாய் கூற்றோ, செவிலி கூற்றோ என்று மயங்குவதற்கு வாய்ப்புள்ளது. தலைவியை அவளது இளமைப்பருவம் முதற்கொண்டு வளர்ப்பவள் செவிலி, தலைவியை வளர்ப்பதில் நற்றாயைவிட செவிலிக்கு அதிகப் பொறுப்பும் பங்கும் உள்ளன. தலைவியைத் தன் மகளெனப் போற்றி வளர்த்ததால் செவிலிக்குத் தலைவியின் உடன்போக்கு பெரும் பாதிப்பைத் தருவதாகிறது. மகட்போக்கிய சூழலில் செவிலி நிகழ்த்தும் கூற்றுகள் அவரு டையபிரிவுத் துயரைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

தலைவியின் பிரிவால் பெருங் கலக்கமுற்ற செவிலி உணர்வுப் போராட்டங்களுக்கிடையில் உழல்வது அவரது கூற்றுவழிப் புலனாகிறது. இந்த நிலையில் செவிலி, தலைவியை அன்பில் கடிதல், பின் உடனே தலைவி நிலைக்காக இரங்கல், தலைவனை

பழித்தல், புகழ்தல் ஆகிய முரண்பட்ட செய்கைகளைப் புரிபவள் ஆகிறாள்.

தலைவியை வளர்த்த பாசம், தனக்குத் தெரியாமல் தலைவி சென்றது. தலைவியின் மணத்தைக் காண இயலாத நிலையின் ஏற்படும் ஏமாற்றம் இவை செவிலியின் உளப் போராட்டங்களுக்கும் காரணமாகின்றன.

செவிலித்தாயின் உளவியலை மிக அழகாக விவரிக்கும் சங்க இலக்கியச் சான்றுப் பாடலாகத் திருமணத்திற்குப் பின் மகளின் இல்லறத்தைக் கண்டு வியக்கும் செவிலி (குறுந்தொகை 242) என்ற பாடலைக் கூறலாம். மகள் தன் கணவனுடன் எப்படித் தனிக்குடித்தனம் நடத்துகிறாள் என்பதை நேரில் சென்று பார்த்துவிட்டு, நற்றாயிடம் வந்து செவிலித்தாய் பெருமிதத்தோடு கூறும் பாடல் இது. மகளின் மகிழ்ச்சியில் தன் வளர்ப்பின் பெருமையைக் காணும் செவிலியின் உளவியல் இதில் வெளிப்படுவதைக் காணலாம்.

சங்க இலக்கியங்கள் காட்டும் உளவியல் கூறுகள் என்பது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் மனித மனதை எவ்வளவு ஆழமாகப் புரிந்து வைத்துள்ளார்கள் என்பதற்கான சான்றுகள் ஆகும் எனவே, சங்க இலக்கியங்களை வெறும் கவிதைகளாகவோ அல்லது வரலாற்று ஆவணங்களாகவோ மட்டும் பார்க்காமல், மனித நடத்தைகளையும் மனநலப் பண்புகளையும் வெளிப்படுத்தும் “உளவியல் கருவூலங்களாகப்” போற்றிப் பாதுகாப்பதும்,அவற்றின் பொருண்மையை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு சேர்ப்பதும் மிக முக்கியமானதாகும் என்பதை உணர்வோம்.

– தொடரும்

# சூப்பர் எல் நினோ உருவாக வாய்ப்பு!

**- வேளாண் முதறிஞர் பெரியசாமி வெங்கடேசன்**

மத்திய மற்றும் கிழக்கு பசிபிக் பெருங்கடலில், கடலின் மேற்பரப்பு வெப்பநிலையானது, வழக்கத்தை விட அதிகமாக உயரும் ஒரு இயற்கையான கால நிகழ்வு, ‘எல்நினோ’ என அழைக்கப்படுகிறது. இது உலகமெங்கும் வானிலையில் கடுமையான மாற்றங்களை ஏற்படுத்தி ,கடும் வெப்பத்தையும், சில இடங்களில் வறட்சியையும் உருவாக்குகிறது.

‘சூப்பர் எல்நினோ’ என்பது அதேபசிபிக் பெருங்கடலில் கடல் மேற்பரப்பு வெப்பநிலை இயல்பைவிட 2டிகிரி செல்சியயஸ் அல்லது அதற்கு மேல் மிக அதிகளவில்உயரும் ஒரு தீவிரமான காலநிலை நிகழ்வு ஆகும். உலகம் முழுவதும் கடுமையான வானிலை மாற்றங்கள், வறட்சி மற்றும் அதிக வெப்பநிலையை ஏற்படுத்துகிறது.

பசிபிக் கடலின் மேற்பரப்பு வெப்பமடைந்த நிலையில். இந்த சூப்பர் எல் நினோ, இந்த ஆண்டின் இறுதிப்பகுதியில் ஏற்படுவதற்கு மூன்றில் ஒருபங்கு வாய்ப்பு இருக்கிறது என்று காலநிலை மாற்ற விஞ்ஞானிகள்

கணித்துள்ளனர். வரலாற்றிலேயே மிகவும் சக்திவாய்ந்த எல் நினோ நிகழ்வுகளில் ஒன்று, பசிபிக் பெருங்கடலில் உருவாகி வருகிறது. இந்த முறை அது காலநிலை மாற்றத்தால் ஏற்கனவே அபாயகரமாக வெப்பமடைந்துள்ள பூமியை வந்தடையும் என விஞ்ஞானிகள் எச்சரிக்கின்றனர். இதன் தீவிரத்தைப் புரிந்து கொள்வதற்கு வரலாற்றின் பக்கங்களை 150 ஆண்டுகள் பின்னோக்கிப் பார்க்கின்றனர்.

குறிப்பாக 1877–78ம் ஆண்டு, எல் நினோ பதிவுகளில்மிகவும் வலிமையானதாக உள்ளது . அது இந்தியா, சீனா பிரேசில் மற்றும் ஆப்பரிக்காவின் பெரும் பகுதிகளில் பெரழிவுகரமான வறட்சியை ஏற்படுத்தியது. பருவ மழை முற்றிலுமாகப் பெய்யத் தவறியது. நீரின்றிப் பயிர்கள் வாடின. கண்டங்கள் முழுவதும் பஞ்சம் பரவியது. அந்தக் காலத்தில் உலக மக்கள் தொகையில் சுமார் 3 முதல் 4 சதவீதம் பேர், அதாவது 5 கோடிக்கும் அதிகமான மக்கள் நீரின்றி உயிரிழந்தனர். இது மனித வரலாற்றில் மிகவும் கொடிய சுற்றுசூழல் பேரழிவென்று எடுத்துக்கொள்ளப்படுகிறது. இப்போது, 2026ல் , அதே போன்ற எச்சரிக்கை அறிகுறிகள் தென்படுவதாக வானிலை ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பூமத்திய ரேகையில் பசிபிக் பெருங்கடலுக்கு அடியில் ஒரு பெரிய வெப்ப நீர்த் தேக்கம் உருவாகியுள்ளது. எனவே தேசிய கடல் மற்றும் வளி மண்டல நிர்வாகம், மே மற்றும் ஜூலை மாதங்களுக்கிடையில் எல் நினோ உருவாக 61 சதவீதம் வாய்ப்புள்ளதாகவும், 2026ன் பிற்பகுதியில் அது ஒரு ‘சூப்பர் எல் நினோவாகத் தீவிரமடைய மூன்றில் ஒரு பங்கு வாய்ப்பு இருப்பதாகவும் கணித்துள்ளது.

இது கவலை ஏற்படுத்தும் ஒரு அம்சமாகவே உள்ளது. காரணம் அதன் கடந்த கால வரலாறு.

இவ்வளவுக்கும் 1877ம் ஆண்டில் உலகம் குளிர்ச்சியாகத் தான் இருந்திருக்கிறது. ஆனால் இன்று, மனிதனால் ஏற்படும் காலநிலை மாற்றத்தால் புவி வெப்பநிலை ஏற்கனவே சாதனை அளவை எட்டியுள்ளது. இதன் அர்த்தம், அந்த ஒரு வலுவான எல் நினோவும் அந்தத் தாக்கத்தை தாங்கிக் கொள்ளும் திறன் குறைந்த பூமியைத் தாக்கும் என்பதாகும்.

இந்த சூப்பர் எல்நினோவை சந்திப்பதற்கு அரசுகளும், உணவு நிறுவனங்களும் உடனடியாகத் தயாராகத் தொடங்க வேண்டும் என விஞ்ஞானிகள் எச்சரிக்கை மணியடித்துள்ளார்கள்.